செ.வெ.எண்-35 நாள்-25.01.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்ட மற்றும் மகளிர் திட்டம் இணைந்து வருகின்ற 28.1.2017 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை செயங்கொண்டம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது. வேலைவாய்ப்பு முகாமில் 25க்கு மேற்பட்ட தனியார் தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டு தகுதியான இளைஞர்களை தேர்வு செய்ய இருக்கிறது. அந்த முகாமில் (108 ஆம்புலன்சுக்கு ஓட்டுநர், செவிலியர்), மெக்கானிக், வெல்டர், பிட்டர், டர்னர், எலக்ட்ரிஷியன், பிளம்பர், ஏ.சி. மெக்கர்னிக், ஆயத்த ஆடை (தையல் பயிற்சி முடித்தவர்கள்), CNC ஆப்பரேட்டர், JCP ஆப்பரேட்டர், Fork Lift Operator ஆகிய வேலைகளுக்கு இளைஞர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள் 18-35 வயதுக்குள் இருக்க வேண்டும். கல்வி தகுதி 8-வகுப்பு முதல், ITI, Diploma, Degree, BE முடித்தவர்கள் கலந்து கொள்ளலாம். வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்வோர் பாஸ் போர்ட் சைஸ் புகைப்படம்-2, கல்வித் தகுதி, அனுபவச் சான்று அசல் மற்றும் நகலுடன் கலந்து கொள்ள வேண்டும்.

எனவே அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் இம்முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.